நாள்: 19.11.2024
OS.135/2017
பெயர்: ஜனார்த்தனன்
வா.சா.1

குறுக்கு விசாரணை

முதல் வாக்குமூலத்திற்கும் பிராதுக்கும் நான் தான் விபரம் சொன்னேன். முதல் விசாரணை வாக்குமூலம் எனது வழக்கறிஞர் முன்பு தாக்கல் செய்தேன். பிரதிவாதி என் பாட்டி வழியில் உறவினர். எனது உறவினர் என்ற விபரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.நான் 10.02.2014ம் தேதி முதல் கடந்த ஆண்டு வரை கூடலூர் நகராட்சியில் களப்பணி உதவியாளராக பணியாற்றி வந்தேன். தற்சமயம் பெரியகுளம் நகராட்சியில் வேலை பார்த்து வருகிறேன். என் பெயரில் சொத்து எதுவும் கிடையாது. நான் பிடித்தம் போக ரூ.14,000 சம்பளம் 2014ல் வாங்கினேன். எனக்கு பணம் கொடுப்பதற்கு போதிய பண வசதி கிடையாது என்றால் சரியல்ல. செய்முறை வைத்து பணம் கொடுத்தேன். நான் என் திருமணத்திற்கு செய்முறை வைத்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 15.03.2015ல் நான் பணம் கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது ரவி மதன் என்ற இரண்டு நபர்கள் இருந்தார்கள். ரவியை நான் வரச்சொல்லி இருந்தேன். மதனை பிரதிவாதி அழைத்து வந்தார். ரவி எனக்கு தெரிந்த நபர். மதன் யார் என்று எனக்கு தெரியாது. பணத்தை என் வீட்டில் வைத்து மாலை 7.00 மணிக்கு கொடுத்தேன். புரோநோட்டை பிரதிவாதி வாங்கி வந்தார். அவர் சொல்ல சொல்ல ரவி எழுதினார். நான் பணம் கொடுத்த வேறு யாருக்கு தெரியும் என்றால் என் மனைவி என் தந்தைக்கு தெரியும். நான் ரூ.2 லட்சம் கடன் கொடுப்பதற்கு நான் துறைரீதியான அனுமதி வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. புரோநோட்டு தேதியிலிருந்து ஒரு மாதத்திற்கு முன்னர் அவர் கடன் கேட்டார். என்னிடம் நேரடியாகத்தான் கேட்டார். அதன்பின்னர் என் மனைவியிடம் கேட்டு பின்னர் 15.03.2015ல் பணம் கொடுத்தேன். பணம் வாங்கிய பின்னர் பிரதிவாதி வட்டி கொடுக்கவே இல்லை. நான் புரோநோட்டை எழுதிய ரவியை வைத்து பிரதிவாதியிடம் பலமுறை பணத்தை திருப்பி கேட்டேன். நான் நேரடியாகவும் ரவி மூலமாகவும் கேட்ட தேதியை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. தமிழரசி என் உடன் பிறந்த சகோதரி என்றால் சரியல்ல. என் சகோதரி பெயர் சௌமியா ஆகும். முருகேசன் தமிழரசியின் கணவர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தமிழரசி மீதும் முருகேசன் மீதும் இவ்வழக்கு பிரதிவாதி அசல் வழக்கு.94/2017 என்ற வழக்கு தாக்கல் செய்து அது அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த தமிழரசி, முருகேசனுடைய தூண்டுதலின்பேரில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல்

செய்த எதிர்வழக்குரைக்கு பதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புரோநோட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என எதிர்வழக்குரையில் வாதுரை செய்துள்ளார் என்றால் சரிதான். அதன்பின்னர் இந்நிதிமன்ற உத்தரவின்படி பிரதிவாதியின் கையொப்பத்தை ஆய்வு செய்ய கையொப்ப நிபுணருக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். கைரேகை நிபுணர் வழக்கு புரோநோட்டில் உள்ளது பிரதிவாதியினுடைய கையொப்பம் இல்லை என கருத்துரை வழங்கியுள்ளார் என்றால் அவர் மாற்றி மாற்றி கையொப்பம் போடக் கூடியவர். கருத்துரைக்கு ஆட்சேபனை செய்யவில்லை என்றும், இடைக்கால மனு எண்.115/2021 என்ற சீராய்பு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியின் கையொப்பத்தை மோசடியாக உற்பத்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்தள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர்நான் வழக்கறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள கையொப்பத்திற்கு பிரதிவாதிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் இருபது 100 ரூபாய் கட்டுகள் கொடுத்தேன். பங்குனி முதல் தேதி கொடுத்தேன். வருடம் தெரியாது. பிரதிவாதிக்கும் வழக்கு புரோநோட்டுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றும், நான் மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல.